# யூலை- 12- புதன்

தூய குவால்பெர்ட் அருளப்பர்

"தன் உயிருக்காக எவ்வளவு துயரத்துடன் நம்மிடம் கெஞ்சி மன்றாடினான்! நாமோ அவனுக்குச் செவி சாய்க்கவில்லை! நமக்கு இத்துன்பம் ஏற்பட்டதற்கு அதுவே காரணம்" என்று சொல்லிக் கொண்டனர். தொநூ. 42:21

## முதல் வாசகம்: தொடக்க நூல்41:55-57,42:5 –7,17- 24

எகிப்து நாடு முழுவதும் பஞ்சம் வந்தபோது, மக்கள் பார்வோனிடம் வந்து உணவுக்காக ஓலமிட்டனர். பார்வோன் எகிப்தியர் அனைவரையும் நோக்கி, ”யோசேப்பிடம் செல்லுங்கள் அவர் சொல்வதைச் செய்யுங்கள்” என்று கூறினான்.நாடுமுழுவதும் பஞ்சம் பரவிய பொழுது, யோசேப்பு களஞ்சியங்களைத் திறந்து, எகிப்தியர்களுக்குத் தானியங்களை விற்குமாறு செய்தார். ஏனெனில் எகிப்து நாட்டில் பஞ்சம் கடுமையாய் இருந்தது.உலகமெங்கும் கொடும் பஞ்சம் நிலவியது. அனைத்து நாட்டு மக்களும் யோசேப்பிடம் தானியம் வாங்க எகிப்திற்கு வந்தார்கள். கானான் நாட்டிலும் பஞ்சம் நிலவியதால், அங்கிருந்து தானியம் வாங்கச்சென்ற மற்றவர்களோடு இஸ்ரயேலின் புதல்வர்களும் சேர்ந்து சென்றனர்.அப்பொழுது, யோசேப்பு நாட்டுக்கு ஆளுநராய் இருந்து மக்கள் அனைவருக்கும் தானியம் விற்கும் அதிகாரம் பெற்றிருந்தார். எனவே அவருடைய சகோதரர்கள் வந்து, தரைமட்டும் தாழ்ந்து யோசேப்பை வணங்கினார்கள்.யோசேப்பு தம் சகோதரர்களை அடையாளம் கண்டுகொண்டார். ஆயினும் அவர்களை அறியாதவர்போல் கடுமையாக அவர்களிடம் பேசி, ”நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” என்று வினவினார். அவர்களோ, ”நாங்கள் கானான் நாட்டிலிருந்து உணவுப் பொருள்கள் வாங்க வந்திருக்கிறோம்” என்று பதில் கூறினார்கள். பின்னர் அவர் அவர்களை மூன்று நாள் காவலில் வைத்தார்.மூன்றாம் நாள் யோசேப்பு அவர்களை நோக்கி, ”நான் சொல்கிறபடி செய்யுங்கள் செய்தால், பிழைக்கலாம். ஏனெனில் நான் கடவுளுக்கு அஞ்சுபவன்.நீங்கள் குற்றமற்றவர்களானால் சகோதரராகிய உங்களில் ஒருவன் சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்கட்டும். மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தால் வாடும் உங்கள் குடும்பங்களுக்குத் தானியம் கொண்டு போகலாம்.உங்கள் இளைய சகோதரனை என்னிடம் அழைத்து வாருங்கள். அப்பொழுது நீங்கள் கூறியது உண்மையென்று விளங்கும். நீங்களும் சாவுக்குள்ளாகமாட்டீர்கள்” என்றார். அவர்களும் அப்படியே செய்தனர்.அப்போது, அவர்கள் ஒருவர் மற்றவரிடம், ”உண்மையாகவே நம் சகோதரனை முன்னிட்டே இப்பொழுது நாம் தண்டிக்கப்படுகிறோம். தன் உயிருக்காக எவ்வளவு துயரத்துடன் நம்மிடம் கெஞ்சி மன்றாடினான்! நாமோ அவனுக்குச் செவி சாய்க்கவில்லை! நமக்கு இத்துன்பம் ஏற்பட்டதற்கு அதுவே காரணம்” என்று சொல்லிக் கொண்டனர். அப்பொழுது ரூபன் மற்றவர்களிடம், ”பையனுக்கு எத்தீங்கும் இழைக்காதீர்கள் என்று உங்களுக்கு நான் சொல்லவில்லையா? நீங்களோ செவிகொடுக்கவில்லை. இதோ, அவனது இரத்தம் நம்மிடம் ஈவு கேட்கிறது என்றார்.யோசேப்பு மொழிபெயர்ப்பாளன் மூலம் அவர்களிடம் பேசியதால், தாங்கள் சொன்னது அவருக்குத் தெரியுமென்று அவர்கள் அறியவில்லை.அப்போது அவர் அவர்களிடமிருந்து ஒதுங்கிச்சென்று அழுதார். பின்பு, திரும்பிவந்து அவர்களோடு பேசுகையில் சிமியோனைப் பிடித்து அவர்கள் கண்முன்பாக அவனுக்கு விலங்கிட்டார்.

**பதில்பாடல்:** உம்மையே நம்பும் எங்கள் மீது உமது பேரன்பு இருப்பதாக

## நற்செய்தி : மத்தேயு 10 : 1 – 7

அக்காலத்தில் இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்.அத்திருத்தூதர் பன்னிருவரின் பெயர் பின்வருமாறு முதலாவது பேதுரு என்னும் சீமோன், அடுத்து அவருடைய சகோதரர் அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோப்பு, அவருடைய சகோதரர் யோவான்,பிலிப்பு, பர்த்தலமேயு, தோமா, வரி தண்டினவராகிய மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோப்பு, ததேயு,தீவிரவாதியாய் இருந்த சீமோன், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து.இயேசு இந்தப் பன்னிருவரையும் அனுப்பியபோது அவர்களுக்கு அறிவுரையாகக் கூறியது ”பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம்.மாறாக, வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது ”விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” எனப் பறைசாற்றுங்கள்“ என்றார்.

**தியானம்:** “ தலை வலியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வரும்போது தான் தெரியும் “ என்பது முதுமொழி. வாழ்வில் நமக்குத் துன்பங்கள் சோதனைகள் ஏற்படும்போது நாம் பல தடவைகளில் கடவுளைப் பார்த்தே கேள்வி கேட்கின்றோம். கடவுளே ஏன் எனக்கு இந்த சோதனை? ஏன் எனக்கு இந்தத் துன்பம்? என்றெல்லாம் என்று கடவுளையே பல தடவைகளில் நாம் நொந்து கொள்ளுகின்றோம். பல தடைவைகளில் நமக்கு ஏற்படும் துன்பங்களுக்கு நாமே தான் காரணம் என்பதையும், துன்பங்கள் நம் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க நமக்குக் கொடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் என்பதையும், நமக்கு ஏற்படும் சோதனைகள் நம் விசுவாசத்தை ஆழப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் பயன்படும் கருவிகள் என்பதையும் நாம் மறந்துவிடுகின்றோம். நம் சொல்லும், செயல்களும் நம் சகோதர சகோதரிகளை எவ்வளவு வேதனைக்குள்ளாக்குகின்றன என்பதை நாம் சற்றும் சிந்திக்காமலே நாம் பல தடவைகளில் காரியமாற்றுகின்றோம். பிறர் எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன என்ற மனப்பான்மையை அகற்றி பிறர் சினேகத்தோடு வாழக் கற்றுக்கொள்வோம். பிறர் நமக்குச் செய்த குற்றங்களை யோசேப்புவைப்போல போல மன்னித்து வாழுவோம். அப்போது நீதி தேவன் நமக்கு நிறைவான நன்மைகளைப் பொழிந்தருள்வார்.